**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை .**

**முன்னிலை – திரு. து. சரவணன் பி.ஏ., பி.எல்.,**

குற்றவியல் நடுவர்,ஊத்தங்கரை

2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.238/2025**

**CNR NO:TNKI12-001753-2025**

அரசுக்காக:-

காவல் ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண். 78/2025 .... குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

1) ஜோதி க/பெ.பழனி
2)பவானி க/பெ.ஜோதி
3)பாபு த/பெ.சுந்தரேசன் .... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கு 27.10.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.R.டீனா அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. E.லட்சுமணன் அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

**தீர்ப்புரை**

கடந்த 15.02.2025ம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு சின்னகுன்னத்தூர் கிராமம் சாட்சி 1 தருமன் தனது நிலத்தருகே வரப்பில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் வந்து இது எங்கள் வரப்பு இங்கு நீ வேலை செய்ய கூடாது என்று சொல்லி 1ம் எதிரி ஜோதி

என்பவன் டேய் தேவிடியா மகனே கெட்ட வார்த்தையால் திட்டியும், கையில் வைத்திருந்த கல்லால் சாட்சி 1 தருமனின் தலையின் இடது பக்க தலை பகுதியில் தாக்கி ரத்தகாயம் ஏற்படுத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியும் 2ம் எதிரி பவானி கையால் சாட்சி 1 ன் முதுகு மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 3ம் எதிரி பாபு என்பவன் வந்து ஏன்டா தேவிடியா பையா என் மச்சானை அடித்த என்று திட்டி கையால் முதுகின் மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் எதிரிகள் மீது ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் BNS பிரிவுகள் 296(b),115(2),118(1)–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையானதும், எதிரிகளுக்கு அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு நகல்கள் வழங்கிய பின்பு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்கள். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், 1ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),118(1) ன் கீழும், 2ம் எதிரி மீது BNS பிரிவுகள் 115(2) ன் கீழும், 3ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),115(2) ன் கீழும், குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரிகள் மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:–</u>

5. கடந்த 15.02.2025ம் தேதி பகல் சுமார் 12.00 மணிக்கு சின்னகுன்னத்தூர் கிராமம் சாட்சி 1 தருமன் தனது நிலத்தருகே வரப்பில் வேலை செய்து கொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் வந்து இது எங்கள் வரப்பு இங்கு நீ வேலை செய்ய கூடாது என்று சொல்லி 1ம் எதிரி ஜோதி என்பவன் டேய் தேவிடியா மகனே கெட்ட வார்த்தையால் திட்டியும், கையில் வைத்திருந்த கல்லால் சாட்சி 1 தருமனின் தலையின் இடது பக்க தலை பகுதியில் தாக்கி ரத்தகாயம் ஏற்படுத்தி சொற்பகாயம் ஏற்படுத்தியும் 2ம் எதிரி பவானி கையால் சாட்சி 1 ன் முதுகு மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், 3ம் எதிரி பாபு என்பவன் வந்து ஏன்டா தேவிடியா பையா என் மச்சானை அடித்த என்று திட்டி கையால் முதுகின் மீது அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியதாகவும் பட்டியல் சாட்சி–8 மோகன் ஊத்தங்கரை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் நான் கடந்த 16.02.2025 ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தருமன் என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செதும், பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 78/2025 சட்டப்பிரிவுகள் 296பி, 118(1), 115(2) BNS ஆக வழக்கு பதிவு செய்தும் வழக்கின் சம்பவ இடத்திற்கு 16.02.2025 ம் தேதி 1.00 மணிக்கு சாட்சிகள் சாலா, மகேஷ்வரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும் தருமன், செல்வி, நாகலட்சுமி, காளியப்பன், மகேஷ்வரி, சாலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்துள்ளார். பின்னர் வழக்கில் காயமடைந்த தருமன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயராஜ் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் ஆகியவை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது 1ம் எதிரி தருமனை 17.02.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு எதிரியின் வீட்டின் முன்பாக இவ்வழக்கின் 1ம் எதிரி தருமனை கைது செய்து நீதிமன்ற வழிகாட்டுல் பின்பற்றி தக்க முறையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும் இவ்வழக்கின் எதிரிக்கு பிரிவு 41 அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்றும் பின்னர் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அரசு தரப்பில் உள்ளது.

<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:-</u>

6. அரசுத்தரப்பில் நடந்த சம்பவம் பற்றியும், சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க வாக்குமூலம் அளித்தது பற்றியும் புகார் கொடுத்த அ.சா.1 தருமன் என்பவர் விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆகவும், சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 செல்வி சம்பவத்தை பற்றியும், சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றி கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியமளித்துள்ளார். காவல் உதவி ஆய்வாளர் மோகன் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். நான் கடந்த 16.02.2025 ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு

மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தருமன் என்பவர் வந்து வாக்குமூலம் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், வழக்கின் சம்பவ இடத்திற்கு 16.02.2025 ம் தேதி 1.00 மணிக்கு சாட்சிகள் சாலா, மகேஷ்வரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தும், தருமன், செல்வி, நாகலட்சுமி, காளியப்பன், மகேஷ்வரி, சாலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் வழக்கில் காயமடைந்த தருமன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயராஜ் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுகள் மற்றும் காயச் சான்றிதழ்கள் ஆகியவை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது 1ம் எதிரி தருமனை 17.02.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு எதிரியின் வீட்டின் முன்பாக இவ்வழக்கின் 1ம் எதிரி தருமனை கைது செய்து நீதிமன்ற வழிகாட்டுல் பின்பற்றி தக்க முறையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும் அவர் மூலம் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும், விபத்து பதிவேடு அ.சா.ஆ.7 ஆகவும், காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகளை கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரிகள் மறுத்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும் கேட்கப்பட்டது.

**<u>ஆய்வுக்குரிய பிரச்சினை:–</u>**

8. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),118(1) ன் கீழும், 2ம் எதிரி மீது BNS பிரிவுகள் 115(2) ன் கீழும், 3ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),115(2) ன் படியான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>வாதுரைகள்:–</u>**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அலுவலக சாட்சி எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிரிகளை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், அரசுத்தரப்பில் சம்பவ சாட்சி மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாகியுள்ளனர் என்றும், எனவே அரசுத் தரப்பில் எதிரிகளின் மீதான குற்றச்செயல்கள் நிரூபிக்கப்படாததால் எதிரிகளை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**<u>சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–</u>**

11. இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தபோது வழக்கின் சம்பவம் பற்றி கூறக்கூடிய சாட்சி அ.சா.1 தருமன் இந்த வழக்கை தீர்மானிக்கும் முக்கிய சாட்சியாக இந்நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த தருமன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணைச் சாட்சியத்தின்போது தான் தற்போது சின்னகுன்னத்தூர்

புளியந்தோப்பில் குடியிருந்து வருகிறேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் தனக்கு தெரியாது என்றும் தன்னிடடம் காட்டப்படும் சமாதான மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளும் தாங்களும் தற்போது சமாதானமாகி விட்டோம் என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 தருமனின் சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 செல்வி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் தற்போது சின்னகுன்னத்தூர் புளியந்தோப்பில் குடியிருந்து வருகிறேன் என்றும் அ.சா.1 தருமன் தனது கணவர் ஆவார் என்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் பக்கத்து நிலத்தை சேர்ந்தவர்கள் என்றும் தற்போது எதிரிகளிடம் சமாதானமாக சென்றுவிட்டோம் என்றும் எதிரிகளின் மீது நடவடிக்கை வேண்டாம் என்றும் போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 யை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபோது அரசு தரப்பில் கேட்கப்பட்ட கேள்விகளை மறுத்து சரியல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.2 செல்வியின் குறுக்குவிசாரணை சாட்சியமும் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கின் காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3 மோகன் தனது சாட்சியத்தில் தான் கடந்த 16.02.2025 ஆம் தேதி ஊத்தங்கரை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்தபோது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று ஊத்தங்கரை அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தருமன் என்பவர் வந்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் காவல்நிலையம் வந்து குற்ற எண் 78/2025 சட்டப்பிரிவுகள் 296பி, 118(1), 115(2) BNS ஆக அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை வழக்கு பதிவு செய்தும் வழக்கின் சம்பவ இடத்திற்கு 16.02.2025 ம் தேதி 1.00 மணிக்கு சாட்சிகள் சாலா, மகேஷ்வரி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வைமகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும் தருமன், செல்வி, நாகலட்சுமி, காளியப்பன், மகேஷ்வரி, சாலா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்னர் வழக்கில் காயமடைந்த தருமன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜயராஜ் என்பவரை விசாரித்து அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 காயச் சான்றிதழ் பெற்றும் வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை கைது செய்ய தேடியபோது 1ம் எதிரி தருமனை 17.02.2025 ம் தேதி காலை 10.00 மணிக்கு எதிரியின் வீட்டின் முன்பாக இவ்வழக்கின் 1ம் எதிரி தருமனை கைது செய்து நீதிமன்ற வழிகாட்டுதல் பின்பற்றி தக்க முறையுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும் இவ்வழக்கின் எதிரிக்கு பிரிவு 41 அறிவிப்பு சார்வு செய்யப்பட்டது என்றும் பின்னர் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கில் சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் கொடுத்த புகார்தாரர் மற்றும் கண்ணுற்ற சாட்சி ஆகியோர் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் மேற்கொண்டு வழக்கில் எவ்வித பயனும் ஏற்படாது என்று கருதி மற்ற அனைத்து பட்டியல் சாட்சிகளையும் நீக்கரவு செய்துவிட்டு இந்த வழக்கில் அ.சா.1 தருமன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று, இவ்வழக்கினை பதிவு செய்து, புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த பட்டியல் சாட்சி–8 காவல் உதவி ஆய்வாளர் மோகன் என்பவரை விசாரித்து வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் குறியீடு செய்து, அரசுத்தரப்பு சாட்சி விசாரணையை முடித்து அரசுத்தரப்பு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

15. மேற்கண்டவாறு அரசுத்தரப்பு வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, எதிரி அ.சா.1 தருமனை கெட்டவார்த்தையால் திட்டவோ, அடித்து காயப்படுத்தவோ, இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகின்றது. இச்சூழ்நிலையில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்து, வழக்கின் புலன்விசாரணை மேற்கொண்டது பற்றி அ.சா.3 மோகன் காவல் உதவி ஆய்வாளர் சாட்சியம் அளித்திருந்தாலும், அரசுத்தரப்பில் எதிரிகளை வழக்கு சம்பவத்தோடு தொடர்புபடுத்தி வழக்குடன் இணைக்கக்கூடிய நேரடி சாட்சியம் எதுவும் இந்த வழக்கில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாக இல்லாததாலும், எதிரிகள் தான் புகார்தாரரான அ.சா.1 தருமனை கெட்டவார்த்தையால் திட்டி அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தினார்கள் என்று நிரூபிக்கப்படாததாலும், இவ்வழக்கில் சம்பவ சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் அரசுத்தரப்பு வழக்கினை ஆதரிக்கும்

வண்ணம் சாட்சியமளிக்காததாலும், எதிரி மீதான குற்றச்செயல்கள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது.

16. முடிவாக 1ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),118(1) ன் கீழும், 2ம் எதிரி மீது BNS பிரிவுகள் 115(2) ன் கீழும், 3ம் எதிரி மீது BNS பிரிவுகள் 296(b),115(2) ன் கீழும், குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை BNSS பிரிவு 271–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரிகளிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு தானாகவே முறிந்துவிடும் என உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே இது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27–ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/து.சரவணன்
நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>அரசு தரப்பு சாட்சிகள்:–</u>**

1) அ.சா.1 – திரு. தருமன்

2) அ.சா.2 – திருமதி.செல்வி

3) அ.சா.3 – திரு. மோகன், காவல் உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

1) அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்திலுள்ள அ.சா.1ன் கையொப்பம்

2) அ.சா.ஆ.2 – சமாதானமனு

3) அ.சா.ஆ.3 – புகார் வாக்குமூலம்

4) அ.சா.ஆ.4 – முதல் தகவல் அறிக்கை

5) அ.சா.ஆ.5 – பார்வைமகஜர்

6) அ.சா.ஆ.6 – மாதிரிவரைபடம்

7) அ.சா.ஆ.7 – விபத்து பதிவேடு

8) அ.சா.ஆ.8 – காயச்சான்றிதழ்

**அரசு தரப்பு சான்று பொருள் :–இல்லை**

**எதிரிகள் தரப்பு சாட்சிகள்:–** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்றாவணம்:– இல்லை**

ஒம்/து.சரவணன்
நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**பின்குறிப்பு:–**

1. எதிரிகள் பிணையில் இருந்து முன்னிலையானார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.
3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**நகல்:**

கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.